தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௭	திருவள்ளுவர் யாண்டு ௨௲௪ பிரமாதீச, வைகாசி (1973 — மே — ஜூன்)	மலர் ௨

அருள்மிகு விபுலாநந்த அடிகளார் இயற்றிய யாழ்நூல்

இரண்டாம் பதிப்பு வெளியீடு ஒரு வேண்டுகோள்

தமிழ்த்தாயின் தவப்புதல்வரும் அருந்தமிழும் ஆங்கிலமும் பொருந்தக் கற்றுணர்ந்து தமிழ் நலம் வளர்த்த புலமைச் செல்வரும் ஆகிய அருள்மிகு விபுலாநந்த அடிகளார் பதினன்கு ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்த்திய இயலிசை யாராச்சியினுல் நுண்ணிதிற் கண்டுணர்ந்த பழந்தமிழ் இசை நூல் முடிபுகளை ஒரு கோவைப்படுத்தி இயற்றிய இசைத் தமிழ் நூல் யாழ் நூல் ஆகும். சிலப்பதிகார அரங்கேற்று காதையில் யாழாசிரியன் அமைதிகூறும் 25 அடிகளுக்குரிய விரிவுரையாக அமைந்த இந்நூல், இசை நூல் இலக்கணத்தை வகுத்துரைக்கின்றது; நூற்றுமூன்று தமிழ்ப் பண்களின் உருவத்தைத் தந்து அவற்றை இசைத்தற்கு வேண்டிய அலகு நிலைகளைக் குறிப்பிட்டுப் பல்லாண்டுகளாக மறைந்து கிடந்த தமிழிசை மரபிற்குப் புத்துயிர் அளித்துள்ளது; கிரம வழக்கு வேறுபட்டு நடக்கும் இக்காலத்தில் பண்டையோர் கொண்ட இருபத்திரண்டு சுருதிகள் இவை எனத் தெளிவுபடுத்தி ஐவகைக்கிரமங்களின் அமைதியைக் காட்டிக் கிரம வழக்கினை என்றும் நிலவச் செய்துளது. மகேந்திரவர்மன் காலத்தில் குடுமியா மலையிற் பொறிக்கப்பெற்ற இசை நூற் கல்வெட்டின் பொருளும் இக்காலத்தார் வழங்கும் எழுபத்திரண்டு மேள கர்த்தா ராகங்களின் அமைப்பும் அவற்றை இசைத்தற்கு வேங்கடமகி வகுத்த வீணைக்

கருவியின் அமைப்பும், தமிழர் கையாண்ட ஆயிர நரம்பு யாழின் கணக்கும், மாதவி யிசைத்த செம்முறைக் கேள்வியாகிய யாழ்க் கருவியின் அமைப்பும் அதன் கண் வாசிக்கப்பெற்ற இசையின் அமைப்பும் இந்நூலில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன இதன் கண் இசையாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவன வாகிய கணக்கு முறைகளும் பூதநூல் நுட்பங்களும் இசை நரம்புகளின் இலக்கணமும் நன்கு விளக்கப்பெற்றுள்ளன. சுருங்கக்கூறின் ஆயிரம் யாண்டுகளாக மறைந்து கிடந்த பழந் தமிழ் இசைச் செல்வத்தைத் தமிழ் மக்கள் மீட்டும் பெறுதற்கு உதவுவது யாழ் நூல் என்று சொல்லலாம். 1947 இல் நச்சாந்துப்பட்டித் திருவாளர் இராம. இராம. சிதம்பரஞ் செட்டி யார் அவர்களின் முழு உதவியுடன் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தா ரால் யாழ் நூலின் முதற் பதிப்பு வெளியிடப்பெற்றது. இப் போது 'யாழ் நூல்' பயில விரும்புவோர்க்கு அளிக்க இந்நூலின் ஒரு படி கூட இல்லை

13, 14, 15—4—1973 இல் நடைபெற்ற நமது சங்க மணி விழாவின் போது தமிழன்பர் சிலர் யாழ் நூலை இரண்டாம் பதிப் பாக வெளியிடுதற்கு நன்கொடை தருவதாக வாக்களித்துள்ளார் கள். யாழ் நூலை மீண்டும் வெளியிடுதற்குக் குறைந்தது பதினைந்தாயிரம் ரூபாய் வேண்டும் என மதிப்பிடப் பெற்றுளது. தமிழர்களின் கலைச் செல்வத்தை உலகம் உணரச் செய்யும் இப் பணிக்குத் தமிழன்பர்கள் தங்களால் இயலும் அளவு நன்கொடை களை அளித்துதவ வேண்டுகின்றோம். நன்கொடையை, "பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

"யாழ் நூல்" படிகள் வாங்க விரும்பி முன்பணம் அளிக்கும் அன்பர்களுக்கு விலையில் தனிச்சலுகை காட்டப்பெறும் இரண் டாம் பதிப்பு விலை ரூபாய் 25/- (முழு காலிகோ கட்டடம்) ஆகும் முன் பணமாக ரூபாய் 20/- இப்போது அனுப்பிப் பதிவு செய்து கொள்வோர்க்கு நூல் வெளிவந்தவுடன் 20 ரூபா தொகைக்கே உடனடியாகத் தரப்பெறும்.

திசையனைத்தும் தென்றமிழ் நாட்டின் இசை பெருக்கும் தமிழ்ப்பணியாகிய யாழ் நூல் வெளியீட்டுக்குத் தமிழன்பர்கள் நன்கொடையோ முன் பணமோ கொடுத்துத்தங்கள் ஆதரவினை அன்புடன் நல்க வேண்டுகின்றோம்.

இலக்கண நூலார் பழமொழிக்கு வகுத்த வரையறை.

பேராசிரியர் வ பெருமாள், எம். ஏ., பி டி., எம். ஆர். ஏ எல்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி, உரிகம்,
கோலார் தங்கவயல. (மைசூர் மாநிலம்)

எப்பொருளையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று நன்கு தெளிவாக்கி வரையறுப்பது அறிஞர் தம் இயல்பாகும் பழமொழியில் புலமையும் ஈடுபாடும் உள்ள அறிஞர்கள் பலர் அவ்வப்போது பழமொழிக்குச் செம்மையான வரையறை வகுத்துள்ளனர்.

நமக்குத் தமிழில் கிடைத்துள்ள மிகத்தொன்மையான பழமொழி வரையறையை வகுத்தவர் கி மு 7ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தொல்காப்பியரே நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை, ஆகிய நான்கு இலக்கணமும் வாய்க்கப்பெற்று ஒரு குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்தவல்லது பழமொழி என்பது தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த வரையறையாகும் பழமொழி ஒரு கருத்தை உணர்த்தவேண்டும். அக்கருத்து காரணத்துடன் பொருந்தியதாகவும் அறிவுக்கு ஏற்றதாகவும் அமைதல் வேண்டும் அதில் நுட்பம், (நுணுக்கம்) சுருக்கம், விளக்கம், (தெளிவு) எளிமை ஆகிய நான்கு இயல்புகளும் அமைந்திருத்தல் வேண்டும். இவை அமையப்பெற்றதே பழமொழி

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப

தொல்காப்பியம்: பொருளதிகாரம்: செய்யுளியல். இந் நூற்பாவிற்குப் பேராசிரியர் பின்வருமாறு உரை எழுதுகின்றார்.

'கூரிதாய்ச் சுருங்கி விழுமிதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்தற்கு வருமாயின் அங்ஙனம் வந்ததனைப் பொருண் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி என்ப புலவர் என்றவாறு.

உழுத உழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்றால் — வழுதியைக்
கண்டன கண்கள் இருப்பப் பெரும்பனைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு (பழமொழி)

என்றவழி, மற்று வழுதியைக் கண்ட கண் இருப்பத்தோள் பசந்தன என்றக்கால், ஒன்றன் வினைப்பயன் ஒன்று நுகர்ந்த தென்புழிக் குறித்த பொருள் இயைபின்மை கூறுதலாயிற்று. அதனைச் சொற்றொடர் இனிது விளக்கிற்றன்றாயினும் முற்கூறிய முதுமொழி முடித்த தென்பது என்னை? அதன் கண்ணே அது முடித்தற்கேதுவாகிய இயைபின்மை கிடந்தமையினென்பது. இது பருப் பொருட்டன்றி நுண்ணிதாகிச் சொற் சுருக்கமுடைத் தாய் விழுமிதாகி எளிதிற் பொருள் தோன்றியவாறு கண்டு கொள்க

வழுதியைக் கண்டகண் இருக்கத்தோள் பசந்தன என்பதை விளக்கப் போந்த பேராசிரியர் 'உழுந்து வயலைக் கன்று மேயக் கழுதை காதை அரிந்தது போல' என்னும் அவர் காலத்தில் (கி. பி. 13 வது நூற்றாண்டு) வழங்கிய பழமொழியை மேற் கோளாகக் காட்டியுள்ளார். உழுந்து வயலை ஊர்க் கன்று மேய்ந்து விட்டது. வயலுக்குரியவன் தண்டிக்க விரும்பினால் வயலை மேய்ந்த ஊர்க்கன்றின் காதை அறிய வேண்டுமே தவிர அதற்கு மாறாக யாதொரு தவறும் செய்யாத கழுதையின் காதை அரிவது முறையாகாது. குற்றம் செய்தவனை விட்டுவிட்டுக் குற்றம் செய்யாதவனைத் தண்டித்தல் முறையன்று என்னும் நீதியை எடுத்துக்காட்டி விளக்கஎழுந்தது இப்பழமொழி. தொல்காப்பியா வரையறைக்கு ஏற்பப் பேராசிரியர் மேற்கோளாக எடுத்துக் காட்டிய பழமொழி, கூர்மை (நுட்பம்) சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய நான்கு இலக்கணங்களும் பெற்று காரணத் துடன் பகுத்தறிவு அடிப்படையில் அமைந்துள்ளது

பழமொழி மக்கள் எல்லோரும் நன்கு அறிந்த பருப்பொருளை மட்டும் உரைத்தால் போதாது நுட்பமான பொருளையும் கூர்மை யான முறையில் உணர்த்தல் வேண்டும் என்று குறிப்பிட்டார் தொல்காப்பியர். உரைக்க வேண்டிய பொருளைத் தலையைச் சுற்றிக்கொண்டு மூக்கைத் தொடுவது போலச் சுற்றி வளைத்துக் கொண்டு சொல்லாமல் இரத்தினச் சுருக்கமாக உணர்த்த வேண்டும் என்பதைக் குறிக்கச் சுருக்கம் தேவை என்று குறிப்பிட் டார். பழமொழியின் பொருள் இதுவா அதுவா என்று ஐயம் ஏற்படாதவாறு விளக்கமாகவும் தெளிவாகவும் அறியாமையை

நீக்குகின்ற வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும் என்பதை உணர்த்த ஒளி வேண்டும் என்று குறித்தார் தொல்காப்பியர். நிகண்டையும் அகராதியையும் புரட்டிப் பார்த்துப் பொருள் அறிந்து கொள்ளக்கூடிய மிகக் கடுமையான அருமையான வழக்கற்ற சொற்களைப் பயன்படுத்தாமல் எளிய சொற்களால் பழமொழி அமைந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்க 'எண்மை' வேண்டும் என்பதை உணர்த்த ஒளி வேண்டும் என்று குறித்தார் தொல்காப்பியர் நிகண்டையும் அகராதியையும் புரட்டிப் பார்த்துப் பொருள் அறிந்து கொள்ளக்கூடிய மிகக் கடுமையான—அருமையான— வழக்கற்ற சொற்களைப் பயன்படுத்தாமல் எளிய சொற்களால் பழமொழி அமைந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்க 'எண்மை' வேண்டும் என்று குறிப்பிட்டார்

(எண்மை என்பதற்கு மாறாக இளம்பூரணர் மென்மை என்று கொண்டு உரை எழுதியுள்ளார். எண்மை என்பதே பொருத்தமாக விருக்கின்றது, 'மென்மை' பொருத்தமன்று) இந்நான்கு இலக்கணங்களையும் பெற்றுக் கேட்போர் ஏற்றுக்கொள்ளும் வகையில் காரண காரியத்துடன் பொருந்தியும் பகுத்தறிவுக்கு இசைந்தும் அமையப் பெற்றதே பழமொழி. தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த வரையறை எல்லா வகையிலும் மிகச் செம்மையாக அமைந்திருக்கிறது.

கி பி 13 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பவணந்தி முனிவர் தாம் இயற்றிய நன்னூலில் நூலுக்குரிய பத்து அழகையும்

'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே'

— நன்னூல் 13

என்னும் நூற்பாவில் வரையறுத்துள்ளார். மேலும் சில சொற்களில் பலபொருளை அடக்கித் திட்ப நுட்பத்துடன் இனிதாகவும் தெளிவாகவும் விளக்க வல்லது நூற்பா என்று நூற்பாவிற்கு இலக்கணம் வரையறுத்துள்ளார்.

'சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்'

— நன்னூல் 18

பவணந்தி முனிவர் நூலுக்கும் நூற்பாவிற்கும் வகுத்துள்ள வரையறை பழமொழிக்கு முற்றிலும் பொருந்தும்

தொல்காப்பியம். நன்னூல் ஆகியவற்றின் அடிப்படையில் பழமொழியின் வரையறையை ஒவ்வொன்றாக இவண் ஆராயலாம்.

நுண்மை (கூர்மை)

நுண்ணிய கருத்தைக் கூரிய சொற்களால்
இயம்புவதே பழமொழி. பழமொழி கூரிய
கத்தியைப் போல விளங்க வேண்டுமே தவிர
மழுங்கிய கத்தி போல் இருக்கக் கூடாது,

நாய் வாலை நிமிர்த்த முடியுமா? என்னும் வினாப் பழமொழி நாய் வாலை நிமிர்த்த முடியாது என்னும் கருத்தைத் தெரிவிப்பதுடன் பிறிது மொழிதல் அணியாக அமைந்து ஒருவனது இயற்கைப் பண்பை மாற்ற இயலாது என்னும் நுண்ணிய கருத்தையும் உணர்த்துகின்றது. இப்பழமொழியில் நுண்மை மட்டுமன்று கூர்மையும் அமைந்துள்ள திறன் நோக்கத்தககது

சுருக்கம் :

புல் நுனியிலுள்ள பனி நீர்த்துளி மிக உயர்ந்த பனை மரத்தையும் தன்னுள் அடக்கிக் காட்டுவது போலச் சில சொற்களால் அரும் பெருங் கருத்தைத் தன்னுள் அடக்கி இனிது காட்ட வல்லது பழமொழி எடுத்துக் காட்டாக 'விரலுக்கு தக்க வீக்கம்' என்னும் மூன்றே சொற்களாலான பழமொழி, உடலியல் கருத்தையும் பொருளாதாரக் கருத்தையும் ஒருங்கே தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றது.

ஒளி (விளக்கம்)

ஒளி இருளை அகற்றுவதைப் போலப் பழமொழியிலுள்ள புதுக்கருத்தும் புதுவிளக்கமும் அகவிருளைப் போக்கும் தன்மையுடன் விளங்குகின்றன. புறஅழகையும் வெளித்தோற்றத்தையும் கண்டு மயங்குதல் கூடாது என்று மனித உள்ளத்தில் ஒளியூட்டிச் சிந்தனையை விளக்குகின்ற பழமொழிகள் பல உண்டு.

'வெளுத்ததெல்லாம் பாலல்ல' என்னும் பழமொழி, அறிவு விளக்கத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

எண்ணம் (எளிமை)

பழமொழி பாமரர் இலக்கியர். பழமொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் பாமர மக்களுக்கு நன்கு விளங்கக்கூடியவாறு எளிமை யானதாக இருத்தல் வேண்டும் எடுத்துக்காட்டாக

மீசையை முறுக்கி வளர்க்கணும்
குழந்தையை அடிச்சு வளர்க்கணும்

என்னும் பழமொழியை நோக்கலாம் இது பாமர மக்களின் எளிய நடைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது இதே பழமொழி ஏட்டு இலக்கியத்தில் முழு இலக்கண வடிவத்துடன் இடம் பெறும் போது

'மீசையை முறுக்கி வளர்க்க வேண்டும்
குழந்தையை அடித்து வளர்க்க வேண்டும்'

என்று அமைவதைக் காணலாம்.

காரணம் :

பழமொழி காரண காரியத்துடன் அமைந்திருத்தல் வேண்டும். வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்னும் பழமொழியைக் கூர்ந்து ஆராய்ந்தால் இதில் காரண காரியம் செம்மையாக அமைந் திருப்பதை நன்கு அறியலாம் காரணம் (cause) முந்தியும், காரியம் (effect) பிந்தியும் அமைந்திருக்கும் பான்மை இங்கு நோக்கத்தக்கது.

இனிமை :

பழமொழி சிந்தைக்கு விருந்தாக அமைந்து
இன்பம் பயத்தல் வேண்டும்
ஓட்டினால் தொட்டிலும் கொள்ளும்
ஓட்டா விட்டால் கட்டிலும் கொள்ளாது

இப்பழமொழியில் அமைந்துள்ள ஆழ்ந்த சமதாய மனித உறவியல் கருத்தை நினைக்க நினைக்கச் சிந்தை பேரின்பம் அடைந்த வண்ணம் இருக்கின்றது.

நன்மொழி :

பழமொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் இடத்திற்கும் கருத்திற்கும் பொருந்துமாறு அமைந்திருத்தல் வேண்டும்

'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்பது நான்கு சொற்கள் கொண்ட பழமொழி. இப்படி மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் மிகப் பொருத்தமானது. பொற்கொல்லன் தான் செய்யும் மோதிரத்தில் பொருத்தமான கற்களைப் பொருந்துமாறு வைப்பது போல மக்களும் பொருத்தமான சொற்களைப் பொருத்தமான இடத்தில் பொருந்துமாறு வைத்துப் பழமொழியை உருவாக்கியுள்ளார்.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான சொற்களைப் பயன் படுத்துவதே நடை என்று ஜானதன் சிப்ட் நடைக்கு வரையறை வழங்கியுள்ளார் (proper words in proper places-J hnaman Swift) இவ்விலக்கணம் பழமொழிக்கும் பொருந்தும்

ஓசையின்பம் (Euphony)

பழமொழி சிந்தைக்கு மட்டும் இன்பம் அளித்தல் போதாது. செவிக்கும் இன்பம் அளித்தல் வேண்டும். உணவு சத்துள்ள தாக இருந்தாலும் சுவையாக இருந்தால்தான் நாக்கிற்கு இன்பம் பயக்கும். அதுபோலப் பழமொழி ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்தைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருந்தாலும் எதுகை, மோனை, இயைபு, இரட்டைக் கிளவி முதலிய இசைநயம் பெற்றிருந்தால் தான் கேட்போர் செவிக்கு விருந்தாக அமையும்.

> திண்ணைக்குத் தேள் கொட்டத்
> தண்ணீர்ப் பானைக்கு நெறி ஏறியதாம் என்னும்
> பழமொழியிலுள்ள எதுகையும்.
> கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
> என்னும் பழமொழியிலுள்ள முற்று மோனையும்
> வடுகு பொடுகாச்சு.
> வைக்கோற் போர் நெல்லாச்சு
> என்னும் பழமொழியிலுள்ள இயைபு நயமும்.
> வாய் வழவழ கை கரகர

என்னும் பழமொழியிலுள்ள இரட்டைக் கிளவியும் சிந்தைக்கு மட்டுமன்று செவிக்கும் இன்பம் பயக்கும் இசை நயப் பழமொழி களாக அமைந்திருக்கின்றன.

ஆழம்

எல்லோரும் நன்கு அறிந்த வெளிப்படையான உண்மையைச் சொல்வது பழமொழியின் இலக்கணம் அன்று. காக்கையின் நிறம் கறுப்பு அஃது அனைவரும் நன்கு அறிந்த உண்மை. இது பெரியவர்களுக்கு மட்டுமன்று, சிறு குழந்தைகளுக்கும் நன்கு தெரியும் இவ்வாக்கியம் மறுக்கமுடியாத ஓர் உண்மையைத் தான் உணர்த்துகின்றது என்றாலும் இதை ஒரு பழமொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் இப்பழமொழியில் ஆழம் இல்லை என்பது தான். காக்கையைப் பற்றிய வேறொரு உண்மையை உணர்த்துகின்றது, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்னும் வாக்கியம் இது வெறும் வாக்கியமாக மட்டும் இல்லாமல் ஆழ்ந்த கருத்தை உள்ளடக்கிக் கொண்டு பழமொழியாகத் திகழ்கின்றது. இது காக்கையைப் பற்றிய உண்மை மட்டும் அன்று மனித உளவியலைப் பற்றிய ஆழ்ந்த உண்மையை உணர்த்திச் சிந்தனையைத் தூண்டிய வண்ணம் இருக்கின்றது. பழமொழி ஆழ்ந்த கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முறைவைப்பு :

எக்கருத்தை முதலில் சொல்ல வேண்டுமோ அதை முதலிலும் எதை அடுத்தாற்போல் சொல்ல வேண்டுமோ அதை இரண்டாவதாகவும், இவ்வாறு முறையாக உணர்த்துவது பழமொழி.

'புலி எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடிபாயும்' என்னும் பழமொழியை நோக்கினால் முறைவைப்பு நன்கு விளங்கும். தந்தையைக் குறிப்பிட்டு அதன் பின்னர் மைந்தனைக் குறிப்பிடுவதுபோல் முதலில் குதிரையைப் பற்றிச் சொல்லி இரண்டாவதாகக் குதிரைக் குட்டியைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை இப்பழமொழியில் அறியலாம்.

உலகம் மலையாமை :

உலகம் மக்கள் அனைவரும் ஒரு மனத்துடன் ஒத்துக் கொண்ட நீதி, அடிப்படை உண்மை ஆகியவற்றிலிருந்து சிறிதும் பிறழாமல் பழமொழி இருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள ஒவ்வொருவர்க்கும் பொறுமை வேண்டும் என்றும் பொறுமையே மிக உயர்ந்த பண்பு என்றும் உலகத்திலுள்ள நல்லறிஞர்கள் அனைவரும் அறிவுறுத்தியுள்ளனர். இவ்வுலக

அறிவுரைக்கும் அறவுரைக்கும் ஏற்பப் 'பொறுமை கடலினும் பெரிது' என்னும் பழமொழி விளங்குகின்றது

உயர்ந்தபயன் (விழுமியது பயத்தல்)

பழமொழி அறவுரையாகவும் அறிவுரையாகவும் அமைவதுடன் வாழ்க்கைக்கு நேரடியாகப் பயன் தரத்தக்க பயன் மொழியாகவும் திகழவேண்டும். ஒவ்வொருவனும் தன்உடல் வீடு, வீதி ஊர் நாடு, ஆகியவற்றை எப்போதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும் என்னும் பயனுள்ள கருத்தைச் 'சுத்தம் சோறு போடும்' என்னும் பழமொழி பகர்கின்றது. சுருங்கக் கூறுமிடத்துப் பழமொழி பயன் மொழியாகத் திகழ்தல் வேண்டும்.

உதாரணம் (எடுத்துக்காட்டு)

வீட்டு யானையைக் கொண்டு காட்டு யானையைப் பிடிப்பது போலத் தெரிந்ததைக் கொண்டு தெரியாதவற்றை விளக்குவது பழமொழியின் இயல்பாகும். எதிர்பார்த்த பயனைவிட மிகுதியான பயன் கிடைத்தால் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல' என்றும் 'சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்தது போல' என்றும் 'பருத்தி புடவையாகக் காய்ந்தது போல என்றும் உதாரணம் காட்டி மக்கள் பேசுவது உண்டு. இவ்வுவமைத் தொடர்களே பழமொழிகளாகிய விட்டன. பழமொழி மிகச் சிறந்த உதாரணத்தைக் கொண்டு விளங்க வேண்டும் என்பதற்கு இவையே தக்க சான்றுகளாக அமைகின்றன.

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவை வழி நின்று பழமொழியின் வரையறையை இவண் சுருக்கமாக ஆராய்ந்தோம்.

இடைக்கால ஐரோப்பாவில் கல்வி

அர. சேஷாசலம். M. A.,
பொருளியல் பேராசிரியர்,
சரபோஜி அரசினர் கல்லூரி, தஞ்சை.

இடைக்காலத்தில் ஐரோப்பாவில், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தே, மாணுக்கர்கள் படித்தனர். பாடங்களை முழுதும் நடத்தா விட்டாலும், இடையிலே விட்டுவிட்டாலும் ஆசிரியர்கள் தண்டிக்கப்பட்டனர். கடினமான பகுதியை வகுப்பு முடியும் நேரத்தில் கற்றுக்கொடுத்தால் அதற்காக ஆசிரியர்களிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பெற்றது. ஏனெனில் இதனுல், பணியடித்தவுடன் மாணுக்கர்கள் வகுப்பிலிருந்து வெளியேற முடியவில்லை. ஒவ்வொரு ஆசிரியரும் நகரத்துப் பேங்கில் அவருடைய கணக்கில் வைப்பு வைத்திருக்க வேண்டும் இவ்வைப்பிலிருந்து மாணுக்கர்கள் விதிக்கும் அபராதங்களை ஆசிரியர்கள் செலுத்தவேண்டும். வகுப்புக்களில் புதிதாகச் சேரும் மாணுக்கர்களை குருவிக்குருக்கள் என்று பழைய மாணுக்கர்கள் அழைத்தார்கள், இவர்கள், ஆசிரியர்களின் பல விரிவுரைகளையும் கேட்ட பின்பு சம்பளம் கட்டலாம் என்று புதிய மாணுக்கர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

இக்காலத்து மாணுக்கர்களுக்கு இருப்பதைப் போன்றே, அக்காலத்து மாணுக்கர்களுக்கும் பல பிரச்சினைகள் இருந்தன. அவர்கள் நிரந்தரமாகத் தங்கி படிப்பதற்கு இடமில்லை உணவு விலை ஏறிக்கொண்டே இருந்தது. தெருக்களில் குப்பை கூளங்கள் அம்பாரமாகக் குவிந்து கிடந்தன. நல்லசாரயமும் கிடைக்கவில்லை. இதனுல் மாணுக்கர்கள் முணுமுணுத்த வண்ணம் இருந்தனர். இற்றைநாளில் மாணுக்கர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே சில சமயம் கைகலப்பு ஏற்படுவது போலவே, அற்றை நாளிலும் ஏற்பட்டது. பாரிஸ், ஆக்ஸ்போர்டு நகராட்சிகளின் வரலாற்றிலிருந்து, அந்நகரங்களில் நிகழ்ந்த பல அமளிகளுக்கும் மாணுக்கர்களே காரணம் என்று தெரிகிறது. இக்கைகலப்புக்களில் குண்டாந்தடிகளையும், வேல்கப்புகளையும், மாணுக்கர்கள் பயன்படுத்திஞர்கள். சாளரங்களிலிருந்து கொதிக்கும் நீரையும், கலங்கல் நீரையும் தெருவில் போவோர் மீது கொட்டிஞர்கள். 1229-இல் பாரிஸில் மாணுக்கர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நிகழ்ந்த கை கலப்பில் பல மாணுக்கர்கள் உயிர் நீத்தனர்.

மாணுக்கர்கள் கல்லூரிகளில் ஆருண்டுகள் படித்தார்கள். தேர்வுகள் வாய்மொழி வாயிலாகவே நடந்தன. தேர்வில் தேறியவர்கள் ஆசிரியர்களுக்கு உதவியாளர்களாக இருக்கும் தகுதியைப் பெற்றனர். ஆசிரியர்களுக்கு இடையில் தருக்க வாதங்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் நடைபெற்றன. ஆசிரியர்களுக்குள் பகைமை முற்றினுல், ஆசிரியர்களின் மாணுக்கர்கள் தம் ஆசிரியர்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் குதிப்பதும் உண்டு. இவ்விதம் ஏற்பட்ட கை கலப்புக்கள் பலவாகும். சீழ்க்கையடித்தலும், காலாலறைதலும் ? மாணுக்கர்களிடையே பெரு வழக்காக இருந்தது. மாணுக்கர்கள் விடியற்காலத்தில் 4 அல்லது 5 மணிக்கு துயில் நீங்கி எழுந்து, ஒரு மணி நேரம் வழிபாடு செய்யவேண்டும் பின்பு பத்து மணி வரை வகுப்புக்கள் நடைபெறும். பத்து மணிக்கு மாணுக்கர்கள் உணவு உட்கொள்வார்கள். மாட்டிறைச்சியும், புல்லரிசிக் கூழும் (oatmeal) தான் அவர்கள் உணவாகும். பின்பு பிற்பகல் ஐந்து மணி வரை வகுப்புக்கள் நடைபெறும். மாலை உணவை உட்கொண்ட பிறகு இரவு 9 அல்வது 10 மணி வரை, தாம் அன்று வகுப்பில் எடுத்த குறிப்புகளை மாணுக்ககர்கள் படிப்பர்.

மாணுக்கரிடையே காலித்தனம் மிகப்பரவலாக இருந்தது. மூத்தோர்களைப் பழித்தார்கள்; குடித்து விட்டு மதுவின் பெருமையைப் பற்றிப் பாடிஞர்கள். சிலர் மகளிரை அழைத்துக் கொண்டு ஓடியதும் உண்டு. விடுதிக் காவலர்களை ஏய்த்து விட்டு மாணுக்கர்கள் இரவு வெளியேறுவதும் உண்டு. இவர்கள் படுக்கைகளை விரித்து, அவற்றின் மீது தலையணைகளைப் போட்டு மூடிவைத்திருப்பார்கள் இதைக் கண்ணுற்ற காவலர்கள் மாணுக்கர்கள் துயில்வதாக எண்ணி ஏமாறுவதும் உண்டு. கிறஸ்தவ கோயில்களின் சடங்குகளையும், அந்நாளைய ஆசாரங்களையும் தாக்கிக் கீழ்த்தரமான பாட்டுக்களை இயற்றிப் பாடிஞர்கள். பிரான்ஸில் இயற்றப்பட்ட ஒரு கவி வருமாறு.

விலை மகளிர் இல்லத்தில் இறப்பதே என்றுறுதி
வாழ்க்கையின் இறுதி சட்டத்தில் என் வாய்க்குச்
சாராயம் வேண்டும்
இதைக் கண்ட தேவதைகள் கும்மாளமிட்டுக் கூக்குரல்
இடட்டும்
விருப்புடன் கடவுள் எனக்கு இதை அளிக்கட்டும்.

நில மானிய வழக்கங்கள், பெண்களின் வஞ்சகம், மனிதனின் ஆற்ருமை, பாதிரியார்களின் படாடோபம், கிறிஸ்தவச் சடங்கு

கள் இவற்றைப்பற்றிய கேலிப்பாட்டுகள் எழுந்தன. தாந்தே என்ற இத்தாலியக் கவிஞர். கொடிய போப்புக்களும், பொருந்தர அரசாங்கக் கரும வினைஞர்களும் அவற்றிலும், அதற்கு முந்திய கழுவாய் நிலையிலும் (Purgatory) அவதிப்படுவதாகக் கூறி யிருக்கிறார்கள். உரோமன் கதோலிக்கர்களின் கருத்துப்படி, இறப்புக்குப்பின் திருவருள் பேற்றிற்குரியவர் பாவம் போக்கப் படும் இடம் ஒன்றுள்ளது இது துறக்கத்தை அடைவதற்கு முன்பு நல்லான்மாக்கள் பெறும் நிலையாகும்.

படித்தவர்களை அக்காலத்தினர் நால்வகைகளாகப் பிரித் தனர். இவர்கள் பணத்திற்காகப் படித்தவர்களும், அறிவுக் காகப் படித்தவர்களும், புகழுக்காகப் படித்தவர்களும், படிப்பினால் விளையும் நன்மைகளுக்காகப் படித்தவர்களும் ஆவார்கள் ஒரு கோமகனார் சிறந்த நூல் நிலையத்தை வைத்திருந்ததோடு, சுவடி களைப் படி எழுதுவதற்காகப் பதினான்கு எழுத்தர்களையும் வேலைக்கு வைத்திருந்தார். ஒரு பாதிரியார் கடன்பட்டும் சுவடி களைப் படியெடுத்தார். என்னே இவருக்கு நூல்களில் இருந்த பற்று! ஒரு சுவடியைப் படி எழுத ஓராண்டு பிடித்தது ஒரு சாமியார் தன்னுடைய ஆண்டு வருமானம் முழுவதையும் இதற்கே செலவிட்டார். ஒருவர் தன்னுடைய மனைவி, மக்கள், வேலைக் காரர்கள் இவர்களைப்பற்றியும், தன்னுடைய ஆசைகளைப்பற்றி யுமே எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பது மன்னிக்கமுடியாத குற்றமாகக் கருதப்பட்டது கல்லூரிகளின் கடமை, அறிஞர்களை உருவாக்குவது மட்டுமல்ல; நன்னடத்தையைக் கற்பிப்பதும் ஆகும் இதுபற்றியே புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரும்

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை"

என்றார். வாழ்க்கைப் போட்டிக்குத் தன்னை ஆயத்தம் செய்து கொள்வதற்கும், ஒருவருக்குக் கல்வி துணைசெய்யவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

உடற்பயிற்சிக்கும் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தார் கள். அரச வினைகளைக்கூட மறந்து ஒரு கோமகனார் விளையாடிக் கொண்டிருந்தார். மகளிரும் டென்னிஸ் போன்றதொரு விளை யாட்டு ஆடினார்கள். மகளிர் பந்தாட்டத்தைப்பற்றிய வருணனை களைச் சீவக சிந்தாமணி போன்ற தமிழ் இலக்கியங்களிலும் காணலாம்.

திருக்குறட் கருவூலம்
(இருள்சேர் இருவினை)

(நக்கீரன் வழியடிமை வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்,
இராணிப்பேட்டை.

க. **உரைவளம்**

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது குறட்பா. இருமொழிப் பயனும் நெறியொடு தேர்ந்த ஆசிரியர் பரிமேலழகர் இக் குறட்பாவுக்கு வகுத்த எழில்பெறும் உரையாமாறு :

"மயக்கத்தைப் பற்றிவரும் நல்வினை தீவினையென்னு மிரண்டு வினைகளும் உளவாகா இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து" என்றவாறு.

" இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் "இருவினையுஞ் சேரா" என்றும் கூறினார். இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையரெனக் கருதி அறிவில்லார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேரா ஆகலின் அவை முற்றவுமுடைய இறைவன் புகழே 'பொருள்சேர் புகழ்' எனப்பட்டது."

"புரிதல் எப்பொழுதும் சொல்லுதல்."

'மெய்ம்மை சேர்ந்த புகழ்' எனப் பரிமேலழகரும், 'மெய்ப் பொருள் சேர்ந்த' என மணக்குடவரும், அவ்வாறே தாமத்தரும் சில சொல்லால் விளக்கிய பொருளைத் தன்னகத்தே கொண்டு அதனினும் திட்பம் மிகப் பெற்றதாய், நச்சர் ஒரு சொல்லால் கூறும் "திருப்புகழ்" என்ற உரை பொலிவது எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாம்.

'பொருள்சேர் புகழ்' என்பதற்கு 'உபதேசப் பொருளோடு பொருந்திப்புகழ்' என்று காலிங்கரும், 'உபதேசப் பொருளோடு பொருந்திய புகழ்' என்று தருமரும் சொல்லைக் கூட்டிக்கொண்டு வரைந்தவுரை பொருள் சேர்ந்தனவாயில. இன்னணம் சொல்லைக் கூட்டிப் பொருள் கண்டமையாற்றான், புரிந்தார் என்ற சொற்குத் தங்குதல் என்று வலிந்துரைத்து இடர்ப்படலாயினர்.

இனி, "மும்மல வித்தாகிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவானிடத்தில்லை" என்ற பரிதியார் உரைக்கு வேண்டுமேல் இக்குறள் மேற்கோளாதல் ஒல்லுமேயலாது, அவ்வுரை இக் குறட்பொருள் ஆமாறில்லையென்க.

இருள் என்ற சொற்கு மயக்கம் அல்லது அறியாமை என்றே பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர். தாமத்தர், நச்சர், தருமர் முதலாய ஆசிரியன்மார் பொருள் செய்ததைப் பொச்சாந்து விடாது போற்றிக்கொள்க.

> "ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு
> மிருபொருளுங் காட்டா திது"

எனத் திருவருட் பயனும் இக்குறளைப்பற்றியே தெரித்தலும் ஓர்க. எனவே அவிச்சையை இருள் என்றுரைத்தலினும் சீர்மை பிறங்கு வெல்லுஞ்சொல் வேறின்மை தேர்ந்து வழங்கியருளிய வள்ளுவர் பெருமானின் சொல்வன்மை நினைத்தொறும் இறும்பூது பயந்து நிற்பதொன்றும் 'எல்லாவற்றினும் நீக்கமற நிறைந்து சான்றாக நிற்கும் சிவனை வழிபட்டு முனிவன் இருளைக் கடப்பன்' என வரூஉம் கைவல்யோபநிடத மொழியும். 'ஊனத் திரு ணீங்கிட வேண்டின்' என வரூஉம் காழிவேந்தரின் திருமொழியும் ஈண்டு உன்னற்பால

உ. இருளின் தன்மை

"இன்ன தன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றார்" எனப் பரிமேலழகர் உரைத்த நயம் பெரிதும் உணர்ந்து இன்புறற்பாலது இவ்வுரையின் மாட்சியினைத் தேர்தற்கு இருள் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஈண்டைக்கு இன்றியமையாதது என்க

> "அருளா லெவையும்பா ரென்றா னத்தை
> யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
> இருளான பொருள்கண்ட தல்லாற் கண்ட
> வென்னையுங் கண்டிலே னென்னேடி தோழி"

என்ற தாயுமான அடிகளார் அருளிச்செயலில் உறூஉம் "இருளான பொருள்" என்பதற்கு நேர்ப் பொருளையே கொண்டு "இருளும் ஒரு பொருளே" என்பாரும் உளர், அடிகளார் தம் அறிவாற் கண்ட அறியாமையாம் பண்பினையே 'இருளான பொருள்' என்றாரல்லது இருள் என்பதோர் பொருள் எனவும். அப்பொருளைத் தாம் கண்டதாகவும் உரைத்தாரல்லர் என்க. என்னை?

"அறிதோ றறியாமை கண்டற்றால்" என நாயனுர் நவின்றதையே அடிகளாரும் ஈண்டு குறித்தனராகலின். எனவே காண்டலைக் கட்புல னுக் கேற்றது அறிவுக்கேற்றி அறிதல் என்று கொண்டுரைக்க.

இனி, இருளும் ஒரு பொருளே எனக்கொண்டு தங்கருத்தை நிறுவுவான் சிவஞான முனிவரர் பலபடக் கூறுவர். அவர்,

'இவ்விருளின துண்மை வெள்ளிடையின் அலர விழித்து நோக்கிய வழியும் மறைத்தற்றெழில் நிகழ்த்தல் பற்றிப் பாரிசேட அளவையான் அறியப்படும்.

"அற்றேல், நீலவடிவிற்ருய்த் தோன்றுதலின் இருள் காட்சிப் பொருள் என்றுற்படும் இழுக்கென்னையெனின் அற்றன்று. துன்னிய இருளின்கண் விழித்துழிப் போலக் கண்ணிமை இறுக மூடிய வழியும் ஒரு தன் மைத்தாய்த் தோன்றுதலின் வேற்றுமையின்மையின் ஆண்டுத் தோன்றுவதும் ஒரு வடிவப் பொருளா மெனின், வடிவப் பொருள் கண்மூடிய வழிக்காட்சி யெய்தல் சாலாமையின், அது மயக்கவுணர்வேயாம் என்பது போதருதலின், விழித்துழி அவ்வாறு தோன்று வதும் அதுபோல மயக்கவுணர்வாவதன்றி இருளின் றேற்றமன்றென்பது அனுபவத்தாற் கண்டுகொள்க."

(சிவஞானபாடியம்)

என்பர் கண்ணிமை மூடிய வழியும் ஒரு தன்மைத்தாய்த் தோன்றுதல் என்பது இயையாது. என்னை? காட்சியைத் தடுப்பது இமையேயன்றி இருளன்று. அற்றன்று: ஆண்டுத் தோற்றம் பெறுவதும் இருளாமெனின், அஃது இமைகளினுட் புகுந்து தோன்றல் வேண்டும். அது காட்சிப் பொருளன்றென் பதன்றே எங்கோள் எனின், தோற்றம் எப்பொருட்கு? உடற்கா, உளத்துக்கா செவிக்கா, அறிவுக்கா என இது முத லிய வினு எழுமாதலின் இருள் காட்சிப் பொருளின்றேல் தோற்ற முருதென மறுக்க. என்னை? ஒரு தன்மைத்தாய்த் தோன்றுதலின் என்றுராகலின்.

இனி, அளவை நூல்கள் இருள் ஒரு பொருளன்றென்னும் இருள் ஒரு பொருளென்னும் சைவ சாத்திரங்களுள் ஒரு சாரன. இவற்றின் உண்மையை நோக்குவாம்.

"செஞ்ஞாயிற்றின் ஒளியுள் காலமே பகல் எனவும் அஃதில் காலமே இராவெனவும் வழங்கப்படுகின்றன. இப்பகல், இரா என்பனவற்றைப் பூனையின் கண்ணும் அக்கண்ணனைய பிற கண்களும் ஒன்றாகவே காண்கின்றனவாகலின் அக்கண்கள் ஒளி வேண்டாமலே நோக்குந் தன்மையவாம் இக்கண்ணுடை வுயிர்கள் இருளென்பதையே அறியா, வெய்யோன் வெம்மை யாற் பகலும் அஃதின்மையால் இரவு மறிந்துகொள்வ. மதி, உடுக்களின் தோற்றத்தானும் அறிவ கூகை, எதனையும் பகற் காலத்தே பாரா இயல்பும் இராக்காலத்தே பார்க்கும் இயல்பும் உடைத்தாகலின் அது "பகற்குருடி" எனப்படும். விரியன் பாம்பும் இத்திறக் குருடே இவ்வியல்புடைப் பிறவும் அன்ன. இத்திற இயல்பிற்குக் கண் அமைப்பே காரணம் ஆம். செஞ்ஞாயிற்றைப் பெரிதும் நோக்கிய மக்கள் விழி சிறு பொழுது ஒன்றும் நோக்காது நிற்றல் போல் கூகை விழியும் அஞ்ஞாயிற்றொளி முன் மாழ்கி நிற்கும் என் புழியும் எத் துணைச் சிறிய அவ்வொளி முன்னுங் கூகை விழி குருடுபடும் இயல்பிற்குக் கண்ணமைப்பே காரணம் எனல் போதருமால். இக் கண்கள் ஞாயிற்றினொளியினையே இருளாகக் காண்பான் அமைக்கப்பட்டபடி வெளியினை இருளாகக் காண்பான் அமைக் கப்பட்டது மக்கள் கண்ணும் இதுபோல்வனவும் அவ்வியற்கை நிலைக்களவெளியினை உள்ளபடியே யறியா நீர்மையவென்பதூ உம் இங்ஙனம் உணரக்கிடப்பதென்க. ஈண்டு இருளில் காண்டலன்றி நிற்கு நீர்மையுடைக் கண் இருளாக் காணு மென்பது என்கொல்எனின், ஒளியில் நின்று கொண்டிருப் பானது விழி தனக்கு அணித்தாயுள்ள யாதொரு மரத்தின் நிழலாகக் காணப்படுஉம் இருளையுங் காண்டலின் அவ்வாறு கூறல் கூடும் என்க கண்ணல்லாத மற்றையுறுப்புக்கள் ஒளியோடு கூடிய ஞான்றுங் காண்டலின்றி நிற்குந்தம் பெற்றி மையால் அங்ஙனங் கூடிக் காண் உணர்ச்சியுடையது கண்ணே யென நிலை பெறுத்தவுள என்க கூறிப்போந்த இயற்கை நிலைக்கள வெளியே இருளென நிற்கும் அச்சாயை யாகக் காணப்படுவ தென்க. ஈண்டு கண் காணுத்தன்மையே இருளெனின், காணுந்தன்மையுடைக் காலத்தும் மர நிழல் எனப்படுஉம் இருள் காணப்படுகின்ற தெனுமாற்றான் அதற்கு அதுவேறென்பது சிறக்கும். ஆவதேல் ஒளி தடை யுண்ட மாத்திரையே அந்நிழல் உளதாகலின் ஒளியுன்மை யிருளெனவுரைக்கலானின்-ஒளியிலா நிலைக்களம் சூனியமன்று, வெளியெனும் பூதம் உண்மையின். அத்திறவுண்மைக்கு வேறாக ஒளியின்மை அல்லது இருள் இருக்கும் என்பது சால்புடைத்

தன்று. இதுவேயுமன்றி, கூகையினது விழிக்குக் கனலி யொளியே யிருளாகக் காணப்படுகின்ற தென்பது கொண்டும் அது மறுக்கப்படும். ஒளியிலாஞான்றும் பூனையின்கண் நனி காண்கின்ற தென்பதூஉம் இம்மறுப்புக்குத்துணை நிற்கும். விழியிலார்க்கும், இமைசார்த்திக் கொண்டார்க்கும், மாலைக்கண்ணர்க்கும் உறூஉம் இருள் நீரமை 'ஒளியின்மையே யிருளெனக்கூறலாம்' என்பதிலடங்குமாகலின் மறுப்பு நிலையுதலுறும். நீளிடைவிண் நீனிறமாகக் காணப்படலும் வெளிதானேயிருளாகக் காணப்படு கின்றது என்பதை நிலைபெறுத்தும் ஒளி பெறீஇயும் பார்வை செயலற்று நின்று விட்ட நிலைக்களவெளி மட்டுமே நீனிறமாகக் காணப்படுகின்றதெனக்கோடலாம். அந்நிலைக்களத்துட்பட்ட வெள்ளிடையும் பிறவுங் கண்கூடு என்றுங் கழறப்படலுண் டன்றோ. உய்த்துணர்க.

"ஈண்டு இருளே நிழலென்னும் பெயருடைப் பொருளாக வும், கானலே கானனீர் என்னும் பெயருடைப் பொருளாகவும் வேறுவேறு வழங்கக்கிடந்தவாறு. கூறிப்போந்த வோரியற்கை வெளிதானே இருள் என்னும் பெயருடைப் பொருளாகவும் வழங் கக்கிடப்பதாயிற்றால். வெளியே இருளாகக் காணப்படுதலினாற் றான் இது பூதவிருள் எனவும் வழங்கப்படுகின்றது என்பாம். ஆயினும் காண்டக்க பொருளைக் காணுமாறு மானுடர்விழிக்கு விளக்கத்தினை நல்கும் ஒளியினைப்போல மறைப்பினை நல்கும் ஒரு பொருளன்று இவ்விருள். இமை சார்த்திக் கொண்டான் விழியினுட் புக்கு அது மறைத்தநின்று என்பது கொண்டும் இது மறுக்கப்படும். 'புகூஉம், புக்குமறைக்கும் என்று புகறல் உளதேல் அஃது எரி கின்ற விளக்கின் நாப்பண் காணப்படு களங்கம்கிரி கரிதலினுறு வது என்று எண்ணுது. ஈண்டு இருந்த இருள் இவ்விளக்கி னடுவே புக்கதாம் என்பான் கூற்றினை ஒக்கும். இப்படிக் கூறி யதை எம் காது கேட்டதும் உண்டு. மறைத்தல் தொழிலுங் கரிய நிறமும் இருள் மாட்டேற்றி வழங்கொரூ வழக்கமானது அஃதொரு பொருள் எனக் கொண்டேற்பக் கூறும் அளவை யாளெய்தியதாகும். ஒளி முன் இருளடங்கி நிற்கூஉம், கெடூஉம் என்பனவும் இப்பெற்றியனவே. என்னை? இருள் ஒரு தனிப் பொருளன்மையின். வெளியினின்றும் இருளை வேறுபடுத்தலும், வேறுபடுத்தப்பட்ட அதனை விழிப்புடை விழிக்கண் சாரவைத்த லும், சாரவைக்கும் வயின் விழி நோக்காது நிற்றலை மெய்ப்பித்த லும் ஏவரும் செய்யாதிருக்குங்காறும் இருள் ஒரு தனிப்பொருள் என்றல் ஏற்புடைத்தாமோ? மேல், வெளிக்கும் இருட்கும்

தொடர்புளதாகலின் வேறுபடுத்தலாகாதெனின். அவ்வித தொடர்பு வேறுபடுத்தற்காம் பிறிதின் கிழமைக் கூட்டமாகாது தற்கிழமையாதல் வேண்டும். அற்றேல் ஞாயிறு மதன்கருதி மொன்றெனப்படுமாறு இரண்டு மொன்றெனப்படுமேயன்றி வேறெனப் படாவே. வெளியும் இருளும் வேறுவேறு என்னும் வழக்கிற்கு இஃது இயையுமாறு யாங்ஙனம்? மக்கள் விழிககு வெளியே யிருளாகத்தோன்றுகின்றது என்னும் எமது முடிபுக்கே இஃதொருபுடையியையலாம். இது கிடக்க, கரியென்னும் பெயரிய பொருள் எந்நோக்கிற்குங் கரிதாகக் காணப்படல் கடுப்ப இருள் காணப்படாமையின் அஃதொரு 'தனிப்' பொருள் என்பது யாங்ஙனம் சிறக்கும்? என்னுங்கடாவுக்கு விடை தடைப் படல், கூகை முதலிய உயிர்களின் நோக்குகட்கு இருள் என்பது ஒருபடித்தாய்க் காணப்பட்டிலது என்புழி ஆம் இங்ஙனம் அஃறிணையுயிர்களின் பார்வை பஃறிறப்பட்டு நிற்பினும், உயர் திணை மாந்தர் பார்வையினுறுவதே கொளக்கிடப்பதெனக்கோடு மெனின், இக்கூற்று சால்பிற்றன்று கூறிப்போந்தபலவும் ஆய் வுக்குரிய வாகலின் மாந்தர்க்கும் மேம்பட்டுள்ள தேவதை களின் விழி பூனை போல்வது இரவிலும் பகலிலும் பார்வை யுடைத்தாகலின் இப்பார்வையினுறுவதே கொளக்கிடக்கும் உண்மையாகலின் 'இக்கூற்று சால்பிற்றன்று' என்பது மொய்ம் புறும். இவ்வதரானே தேவதைகட்கு வேறாக நின்று இன்பமுந் துன்பமும் நுகர்பாக்கு இறைவனால் படைக்கப்பட்ட மாந்தர் விழி. வெளியினையே இருளாகக் காண்பானமைக்கப்பட்டமையின், அவ்விருள் மேலிடா தடங்கு மேலவை காட்சியுண்டாம்படி நெருப்புருண்டை என்னும் ஞாயிறு, இராக்கதிராய திங்கள், விண்மீன் ஆகிய இவற்றுள் ஒளித்திறங்கள் அமைக்கப்பட்டன என்பதூஉம், இவ்வழியான் இராப்பகல்கள் நுகர்ச்சியாமாறு மாந்தர்க்கே தலையான இருக்கையாய இப்புவியும் படைக்கப் பட்டது என்பதூஉம் ஏற்புடையனவே"

என்று இருளைப் பற்றித் திருவருட்பெருஞ்செல்வராய பாம்பன் குமர குருதாச அடிகளார் கூறுதலைக்கண்ணுக. இதனானே, ஒளியின்மையே இருள் என்ற அளவைநூற்கூற்று முழுதும் பொருந்துமாறின்மையும், பார்வையை மறைக் கும் ஒரு தனிப்பொருளே இருள் என்ற ஒருசார் சைவ நூற்கூற்றுச் சிறிதும் பொருந்துமாறின்மையும் உணர்க இன்னும் இதனானே இன்ன தன் மைத்தென அறுதியிட்டுக் கூறவொண்ணாததாய் இருள் இருத் தலையும் எண்ணுக

௩ அவிச்சை

அவிச்சையின் தன்மையும் இருளுக்குக் குறைந்ததல்ல. தத்துவங்களை யெல்லாம் அறிவுக் கொப்ப விளக்கும் ஆசிரியர்கள் அவிச்சையை விளக்கப் பெரிதும் சிரமப்படுகின்றார்கள். அஃது அவிச்சையான் மூடப்பட்டிருப்பதனாற் போலும் என்னை? அவிச்சைதங்களை மறையா நிலையில் பேரின்ப நுகர்கின்றார்களாதலினாலும், அந்நுகர்ச்சி "அம்மா பொருளொன்றும் அறிந்திலனே' என்ற நிலையிற்றாதலாலும் என்க. இது பற்றி மேலும் ஆய்தல் பெருகுமாதலானும் அஃது ஈண்டைக்கு வேண்டாமையானும் மேலே செல்வாம்

"நல்வினையும் பிறத்தற்கேதுவாகலான் இருவினையுஞ்சேரா என்று கூறினார்" எனவரும் பரிமேலழகர் கூற்றை நோக்குவாம். தீவினையாங்ஙனம் அளறு படுந்துன்பீந்து எஞ்சிய பகுதியையும் நுகர்பாக்கு பிறப்பினுட்படுத்துமோ அங்ஙனமே நல்வினையும் தேவருலகுறும் இன்பீந்து எஞ்சிய பகுதியையும் நுகர்பாக்கு பிறப்பினுட்படுத்தும் இது கருதியே ஆன்றோர் தீவினையை இரும்பு விலங்கென்றும் நல்வினையைப் பொன்விலங்கென்றும் புகல்வர். இருவினையுஞ் சேரா நிலையே இறைவனைச்சாரும் நிலையாம். எனவே இறையடிப் பேற்றைக் கருதினோன் இருவினைக்கும் இருக்கையான இல்லறத்தைத்துறப்பர். அன்னணம் துறந்தார் தாம் செய்த தீவினையின் பகுதியைத் தீயோர்பாலும் நல்வினையின் பகுதியைத் தமக்கு அன்பர்பாலும் சேரவைத்துக் கழிப்பர். அன்னணங் கழியாதெஞ்சிய பகுதி திருவருளாற்கழியும். கழிந்திலதேல் அதனை நுகர்ந்தே கழிப்பர். திருவருளால் இருவினையுங் கழியும் என்பது நோக்கியே ஆசிரியர் திருவள்ளுவர் "இருவினையுஞ்சேரா" என்றார். இன்னணங் கழித்தோர் தீவினை வெருவி நிற்பராகலான் தீவினைகளிற் புகார். நல்வினையும் பிறவிக்கு வித்தேயாகலின் அதனினும் நல்வினையுஞற்றுஞ் சூழ்நிலை ஏற்படின் அஞ்ஞான்று அச்செயலை இறைவற்கே உரித்தாக்கிப் பெயரும் புகழும் நாடாது வெருவி நிற்பர். இதனால் இருவினையுஞ் சேரார் என்க.

௪ இறைமைக் குணங்கள்.

இறைமைக் குணங்களை "எண் குணத்தான் என்ற குறட்பாவில் விரிவாகக் காண்பாமாதலின் ஈண்டு உரைத்திலம். இறை

மைக் குணங்கள் இலராயினுரை உடையரெனக் கருதி அறிவில்லார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேரா எனப் பரிமேலழகர் பகர்வுற்றதை ஈண்டு நோக்குவாம்.

இறைவன் மறைகட்கோ ஆகமங்கட்கோ அளவிடுந்தன்மையின் நில்லாதவன். ஆயினும் மறைகளின் பொருளாயும் ஆகமங்களின் பொருளாயும் நிற்பவன். மந்திரங்கட்கோ நாள்தோறுஞ் செய்யும் பூசனைக் கடன்கட்கோ சிக்குண்ணுதும் மகிழ்வுருதும் இருப்பான் பெரியவற்றுக்கெல்லாம் பெரிய பொருளாகவும், சிறியவற்றுக்கெல்லாம் சிறியதாயும் இருப்பான். அவன்றன் நீர்மையை,

"வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்து நாத
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது"

என வரூஉந் திருப்புகழ் விளக்குதல் ஓர்க எல்லாமாய் அல்லவுமாயிருக்கும் அவன் "சிறப்பொடு பூசனை" செல்லுதலால் மகிழ்தலிலன். இதனை

"பொக்க மிக்கவர் பூவு நீருங் கண்டு
நக்கு நிற்ப னவர் தம்மை நாணியே"

என வருஉம் நாவரசர் பெருமானின் திருமொழியும் உணர்த்தும். இறைவனை எய்த வேண்டுவோர் "நேசர்க்குப் பேரொணாதது" என்ற அருளுரை தேர்க. இது நோக்கியே "அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே" என்றது திருமந்திரம்.

இக்குணங்கள் இலராயினுரை இறைவன் எனக்கொண்டு புகழ்தல் அறியாமையின் பாற்படுதலேயன்றி அப்புகழ்களும் பொருளில வாயின. பொருளிலவென்பதே பயனில என்றுபடும். படவே அப்பயனில் புகழ் பாராட்டுவார், ''பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல், மக்கட் பதடி யெனல்'' என்ற குறட்பாவிற்கு இலக்கியமாய் நிற்பர். இது நோக்கியே, பரிமேல ழகர் ''அறிவில்லார்'' என்று இழித்து உரைத்ததூஉம் என்க.

மேற்கூறியவாற்ருல், மக்கள் துயர் வீடுவிப்பான் வேண்டி, மா நிலத்துப் பிறப்புற்ருன் இறைவன் என்னலும் மாசுபடுவதே யாம். மந்திரங்கட்கும், செய்யும் பூசனைகட்கும் மகிழ்வுற்று, வந்திப்பார்க்கு நலம் விளைப்பான், அவர்தம் மாற்ருரை மாள்விப் பன் என்று கூறுதலும் மாபெரும் இழுக்கேயாம் இவ்வாறு புரி வது ஒரு தேவதையென்ருல் அஃது இறைமைத்தன்மை எய்தாத, மக்களினும் சற்று உயர்வுடைய பிறவியேயாம் என்றே மதிக்கத் தக்கது. அன்றியும் அப்பிறவியும் அதனினும் உயர் பிறவியால் துன்புறுத்தப் படற்கும், ஆளப்படற்கும் உரித்தாம். இதனுனே இத்தகு பிறவிகள் ஒரு நாள் இறப்புக்கும் உரியவே என்க அத் தன்மையுடைப் பிறவிகளைத் தெய்வம் என மதித்துக்கொண்டாடு தல் அறிவின்மையே; பிறவிக்கும் வித்தே என்க

இக்குறளால் பிறவிக்கே வித்து மூலமலம் எனவும் அதனி னின்றும் கிளைப்பவை இருவினைகள் எனவும், இவை நசித்தா லன்றி மூலமலம் அழிவு படாது எனவும், இவை நசித்தற்கு இறைவனது பொருள்சேர் புகழ்களைப் புரிதல் வேண்டுமெனவும் அறிவுறுத்தார் ஆயிற்று.

அடுத்தக் கட்டுரையில் ''பொறிவாயி லைந்தவித்தான்'' எனத்தொடங்குங் குறளைக் காண்பாம்.

எகர வினா

டாக்டர். மோ இசரயேல்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்.

வினாப்பொருள் :

தொல்காப்பியனார்

ஆ ஓ ஏ அம்மூன்றும் வினா (தொ. எ. 32 என்னும் நூற்பாவில் மொழிக்கு ஈற்றில் நின்று வினாப்பொருளைத் தருவன வற்றை மட்டுமே தொகுத்துக் கூறி உள்ளார் இடையியலில் (தொ. சொ 255 256) ஆகிய இடைச்சொற்கள் வினாப்பொருளில் வழங்குவதையும் சுட்டியுள்ளார் அவர் எகரம் ஏகாரம் ஆகியவற்றை வினாவடிகளாகக் குறிப்பிடவில்லை எழுத்ததிகாரத்தில் அவர் யா வினா முதலிய மென்றொடர் மொழியும் (தொ. எ 427) யாவினா மொழியே இயல்புமாகும் (தொ. எ 428) என்று குறிப்பிடுவனவற்றினின்று யகரமெய் வினாப்பெயரடியாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது. [1] அவர் சொல்லதிகாரத்தில் யாவன், யாவள், யாவர் ஆகியவற்றை உயர்திணைப் பெயர்ப் பட்டியலிலும் (தொ. சொ. 162) யாது, யா, யாவை ஆகியவற்றை அஃறிணைப் பெயர்ப்பட்டியலிலும் (தொ. சொ. 167) [2] தொகுத்துள்ளமையும் இதனை உறுதி செய்கின்றது. மேலும் யாவென் வினா வடியினின்று ஐம்பால் வேறுபாடுடைய யாவன், யாவள், யாவர், யாது, யார் யாவை ஆகிய வினாப்பெயர்கள் அமைந்துள்ளன என்றும் அறிகின்றோம்.

தொல்காப்பியனார்

சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
(தொ. எ. 159)

என்னும் நூற்பாவில் எகர வினாவடியாகப் பிறந்த இகர இறுதிச் சொல்லினைச் சுட்டியுள்ளார். இதற்கு உரையாசிரியர்கள் எதோளி (-எங்கு) என்ற சொல்லினை எடுத்துக்காட்டாகக் குறித்துள்ளனர். எனவே அவர் எகரத்தினை வினாப்பொருள் தருவதாகக் கருதுகின்றார். ஆனால் எகர வினா வடியாகப் பிறந்த எவன், எவள், எவர், எது. எவை என்னும் ஐம்பாற்பெயர்கள், எங்கு, எவண் போன்ற சொற்கள் தொல்காப்பியர்க்கு உடன்படன்று. ஏகாரம் வினா எழுத்தாக அவரால் ஏற்கப்படவில்லை.

தொல்காப்பிய மொழியில் எகரம் பெயரடையாக அமைந்துள்ள சில இடங்கள் காணப்படுகின்றன.

எ-டு. எப்பெயர் (தொ சொ. 128)
எவ்வயின் (தொ. சொ. 68, 428)
எப்பொருள் (தொ சொ 237, 297)
எத்திறத்தானும் (தொ. சொ. 429)
எந்நிலம் (தொ. பொ. 21)
எவ்வழி (தொ. பொ. 72)

இவண் எல்லாம் எகரம் வினாப்பொருளில் அமைகின்றதாவென்பதைப் பின்னர்க் காண்போம்.

குறிப்பு வினை :

மேலும் இலக்கண நூலார் யாவர் (யார்), எவன் என்னும் இரு பால் வேறுபாடற்ற வினைச்சொற்களைத் தந்துள்ளனர் இவற்றை வினையியலுள் கூறியுள்ளது மன்றிப் பயனிலையாகவே வழங்குதலையும் சுட்டியுள்ளனர். தொல்காப்பியனார்

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே
(தொ. சொ 200)

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே
(தொ. சொ. 219) எனவும்

நன்னூலார் :

யாரென் வினாவினைக் குறிப்பு உயர்முப்பால் (நன் 349)
எவனென் வினாவினைக் குறிப்பு இழி இருபால் (நன். 350)

எனவும் கூறி :

அவன் யார்? (யாஅர்) (யாவன்)
அது எவன்? (யாது)
அவள் யார்? (யாஅர்) (யாவள்)
அவை எவன்? (யாவை)
அவர் யார்? (யாஅர்) யாவர்)

போன்ற எடுத்துக்காட்டுக்களைத் தர வழி வகுக்கின்றனர்.

இலக்கண நூலார் யார், எவன் என்னும் வினாச் சொற்களைப் பால்-எண் வேறுபாடற்ற குறிப்பு வினைச்சொற்களாகக் கொண்டுள்ளனர். இவை முறையே யா, எ என்னும் வினாவடிகளிலிருந்து தோன்றியவைகளேயாம்.

தொல்காப்பியனார் சொல்லதிகாரத்தில்,

யார் எவன் என்னும் ஆயிரு கிளவியும்

அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் (தொ. சொ. 31) என்று குறிப்பிடும் நூற்பாவில் யாது, எவன் என்னும் வினாக்கள் பற்றிய செய்தி உளது.

எ-டு இச்சொற்குப் பொருள் யாது? (என்ன?)
இச்சொற்குப் பொருள் எவன்? (என்ன?)

எனவே 'எவன்' என்னும் வினாப்பயனிலை (தொ. சொ 66) யாது (எது), யாவை (எவை), என்ன என்னும் பொருட்களில் பழந் தமிழில் ஆட்சி பெற்றிருந்தது என அறிதும். தொல்காப்பியனார் காலத்தில் யாவென் வினாவடியே ஐம்பால் வேறுபாடுடைய பெயர்களிலும் அமைந்தது எனவும் எகரம் ஐம்பால் வினாப்பெயர் அடியாக அமையவில்லை எனவும் கண்டோம்.

எ-டு. யாவன்
யாவள்
யாவர் (எவன் யாது, யாவை)
யாது
யாவை

சங்க இலக்கியத்தில் யகரமெய் முதல் வினாவடியாகத் தோன்றிய யாங்கனம். யாங்கு. யாண்டு. யாவண் போன்ற சொற்களும் காணப்படுகின்றன

வினாவும் சுட்டும்:

வினாவும் சுட்டும் பலவகையில் தொடர்புடையன. தொல்காப்பியனார் அ இ உ அம்மூன்றும் சுட்டு (தொ. எ. 31) என்று கூறித் தொடர்ந்து ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா (தொ எ 32) என்கின்றார். மேலும் அவர் சுட்டு முதலாகிய இகர இறுதியும் எகர முதல் வினாவின் இகர இறுதியும்' (தொ. எ. 159) என்று சுட்டையும் வினாவையும் சேர்த்துக்கூறி அதோளி இதோளி, உதோளி, எதோளி போன்ற எடுத்துக்காட்டுக்களுக்கு இடந்தருவதும் இதனை உறுதிப்படுத்துகின்றது. உருபியலில் புணர்ச்சி கூறுங் காலும். (தொ எ. 177, 178. 200) குற்றியலுகரப் புணரியலில்

சுட்டுச் சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
(தொ. எ. 427) எனக்குறிப்பிட்டு

ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு போன்ற சொற்களை ஓரே வகையான புணர்ச்சியில் அடக்கிக் கூறுங்காலும் இது தெளிவுபடுத்தப்படுகின்றது.

நன்னூலாரும் சுட்டினைச் சுட்டித் தொடர்ந்து வினாவினைக் கூறுவதும் (நன் 66, 6) 'எகர வினா முச்சுட்டின் முன்னர்' (நன். 182) 'சுட்டியா எகர வினாவழி' (நன். 106) என்னும் நூற்பாக்களில் எகர வினாவினையும் அ, இ, உ என்னும் முச்சுட்டுக்களையும் இணைத்துக் கூறி இருப்பதும் இவை தொடர்புடையன என்பதை மேலும் வலியுறுத்துகின்றன.

சொல்லடியும் பெயரடையும்:

யகர மெய் முதல் வினா சொல்லடியாக மட்டும் வருதலின்றிப் பெயரடையாக வருதல் இல்லை.

எ-டு. யாவன், யாவள், யாவர், யாது, யாவை, யாங்கு (நற் 29, 55), யாவன் (நற் 306), யாங்கனம் (நற் 381).

ஆனால் அ, இ, உ என்னும் முச்சுட்டுக்களும் எகரமும் சொல்லடிகளாகவும் பெயரடைகளாகவும் அமைகின்றன

சொல்லடி: எ-டு. அவன் அங்கு எங்கு (சிலம் 19)
இவன் அவன் எவன்
உவன் அங்கண் எவணர் (குறு 126)
எவள் (பரி. 6)

பெயரடை: எ-டு. அப்பொருள் எவ்வினை (நற். 189-6)
இந்நிலம் எவ்வூர் (ஐங் 62-4)
உப்பக்கம் எந்நீரர் (படி 395-3)
அச்சொல் எவ்வாறு (முத்தொள் 87-3)

எகர வினாவின் வரலாறு:

தொல்காப்பியர் காலத்தில் எகரம் பால்-எண் வேறுபாடற்ற வினாப்பெயர்ப் பயனிலைச் சொல்லுக்கு அடியாக மட்டும் மிகுதியும் ஆட்சி பெற்றிருந்தது. எகர வினாவின் இகர இறுதி (தொ. எ. 159) என்னும் இடத்தில் எகரம் வினாவடியாதல் உண்டு என்பது ஓரளவு சுட்டப்படுகின்றது. என்றாலும் அக்காலத்தில் எகரம் ஒரு வினாவடியாக முழுவளர்ச்சி பெறவில்லை எனலாம். யாவென் அடியாகத் தோன்றிய வினாப் பெயர்களே ஐம்பாலிலும் ஆட்சி பெற்றிருந்தன. தொல்காப்பியனார் பயன்படுத்தியுள்ள எப்பெயர், எப்பொருள், எந்நிலம், எவ்வழி போன்ற சொற்களில் எல்லலாம் பெயரடை எகரம் வினாவாக அமைந்துள்ளது என்று கூறுவதைவிடப் பெரும்பாலும் தொகுதித் தொடர்பு சுட்டி ஒப்பிடுதற் பொருட்டும் முழுமை சாற்றுதற் பொருட்டும், அறியாப் பொருளைச் சுட்டுதற் பொருட்டும் வழங்கியது என்பதில் தவறில்லை. எனவே தொல்காப்பியனார் மொழியில் அருகி வந்துள்ள பெயரடை எகரம் முழு அளவில் வினா என்று சொல்வதற்கில்லை.

சங்க இலக்கியத்தில் வேறு சில சொற்களிலும் எகரம் வினாப் பொருளில் ஆட்சி பெறத் தொடங்கிற்று. முதன் முதல் பரிபாடலில் எவள் (பரி. 6-91) என்ற பால் வேறுபாட்டுடன் அமையும்

வினைப் பெயர் காணப்படுகின்றது. 'எற்று' (புறம். 261-4) அஃறிணை ஒருமையில் அமையும் வினைச் சொல்லாகவே அமைகின்றது எனலாம். 'என்' (குறு 319, நற் 271, புறம். 280) பல இடங்களில் காணப்படுகின்றது. எவணர் (குறு. 126) என்னும் எகர வினு வடியாகப் பிறந்த ஒரு சொல் குறுந்தொகையில் காணப்படுகின்றது. சங்க மருவிய கால இலக்கியத்தில் எங்கு (சிலம். 19. 69), எங்கனம் (குறள் 251) போன்ற சொற்கள் ஆட்சி பெற்றுவிட்டன. மேலும் எகரம் பல இடங்களிலும் பெயரடையாக வழங்கியதுமன்றிச்சில இடங்களில் அது தெளிவான வினுப்பொருளிலும் அமையலாயிற்று.

எ-டு. எக்கால் குறு. 297-7
எஞ்ஞான்று கலி 110-16
எத்துணை புறம். 141-13
எந்நாடோ புறம். 150
எந்நாள் கலி 5-19
எவ்வாய் நற். 147
எவ்வினை நற். 189-6
எவ்வூர் ஐங் 62-4

எனவே சங்க இலக்கியத்தில் சுட்டு எழுத்துக்களைப்போலவே எகரமும் பெயரடையாக நின்று வினுப்பொருளை உணர்த்தலே, தொல்காப்பியனுர் காலத்தொகுதித் தொடர்பு சுட்டும் எகரமும், யாவென் வினு திரிந்தமைந்த எகர வினுவும் ஒன்ருகவே மயங்கி வேறுபடுத்த இயலாதவாறு வழக்கில் அமைத்தன. [3]

காலப்போக்கில் யாவென் வினுவே எகர வினுவாக மாறியது. 'ஆவோடல்லது யகரம் முதலாவது' (தொ. எ. 65) என்ருர் தொல்காப்பியர். பழந்தமிழில் யகரத்தோடு ஆகாரம் மட்டுமே இணைந்து வந்தது. [4] காலம் செல்லச் செல்ல இந்த ஆகாரம் எகரமாகத் திரியவே மொழி முதல் யகரம் மறைந்து விட்டது. தொடக்க நிலையில் இம்மாற்றத்திற்கு மொழி முதல் யகரமே காரணமாக அமைந்திருத்தல் வேண்டும். திராவிடமொழிகளில் மொழி முதல் இடையண்ண மெய்களான (pallatal cousouants) ச, ஞ, ய ஆகியவற்றை ஒட்டி வரும் ஆகாரம் எகரமாக மாறுதல் இயல்பே. இந்த எகரம் நீட்சி பெற்று ஏகாரமாக அமைதலும் உண்டு. இம்மாற்றத்தின் விளைவாலேயே சங்க இலக்கியத்திலும் சங்க மருவிய கால இலக்கியத்திலும் எவள், எவணர், எங்கனம், எங்கும், எங்கு போன்ற சொற்கள் வழக்கில் அமையலாயின.

எரக அடியாகப் பிறந்த புதிய வினுச் சொற்கள் அமைந்தமையும், தெளிவான எகரிவினு பெயரடையாக அமைந்தமையும் சங்க காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி

யாகும். தேவார திருவாசக காலத்தில் எகர வினா அடியாக முழு அளவில் வளர்ச்சி பெற்றுவிட்டது. எனவே தான் நன்னூலார்

எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினுவா கும்மே
(நன் 67) என்று கூறினர்.

பின்னர் எகர முதல் வினுப் பெயர்கள் பெருவழக்கில் இடம் பெற்று யகர முதல் வினுச் சொற்கள் அருகி வழங்கின. இக் காலத் தமிழிலும் எகரம் வினுவடியாகப் பிறந்த சொற்களே மிகுதியாக வழங்குகின்றமை நோக்கத்தக்கது.

ஒப்புமையாக்கம்

எகர வினா, சுட்டு எழுத்துக்களின் வழக்குகளின் ஒப்புமை யாக்கத்தால் அவை வழங்கும் அமைப்புக்களில் எல்லாம் வழங் கத் தலைப்பட்டுப் பெரும்பாலும் யகரமெய் முதல் வினுவின் இடத்தையும் பிடித்துக்கொண்டது.

அவன்	இவன்	உவன்	எவன்	ஏவன்
அவள்	இவள்	உவள்	எவள்	ஏவள்
அவர்	இவர்	உவர்	எவர்	ஏவர்
அது	இது	உது	எது	ஏது
அவை	இவை	உவை	எவை	ஏவை
அவ்	இவ்	உவ்	எவ்	
அங்கு	இங்கு	உங்கு	எங்கு	
அவண்	இவண்	உவண்	எவண்	
அப்பக்கம்	இப்பக்கம்	உப்பக்கம்	எப்பக்கம்	
அங்ஙனம்	இங்ஙனம்	உங்ஙனம்	எங்ஙனம்	

'என்' என்னும் சொல்லின் தோற்றம்

தொல்காப்பியனுர் 'வகரம் கிளவி நான்மொழி ஈற்றது (தொ. எ 81) என்று குறிப்பிடுகின்றுர் இதற்கு உரையாசிரி யர்கள் அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்மொழிகளைத் தருகின்றனர் (தொ. எ 378, 382 தொ. சொ. 167. 346) அவ், இவ், உவ் என்பன அஃறிணைப் பலவின்பாற் சுட்டுப் பெயர்கள். அவை, இவை, உவை என்பவற்றிற்கு இணையானவை.

தொல்காப்பியனுர் அவ் இவ், உவ் என்னும் சொற்கள் வேற்றுமை உருபேற்குங்கால் வற்றுச் சாரியை பெறும் (தொ. எ. 183) என்கின்றுர். எ—டு. அவற்றை, இவற்றை முதலியன. யாவை என்னும் பொருளில் வழங்கும் அஃறிணைப் பலவின் பால் வினுப் பெயரான யாவென் வினுவும் வற்றுச் சாரியை ஏற்கும் (தொ. எ. 179) என்கிருர். எ—டு. யாவற்றை, யாவற் ருன் முதலியன. ஆனல் அவர் 'என்' என்ற சொல்லைக் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியனுர் யாவை, யா ஆகிய அஃறிணைப் பண்மைப் பெயர்களைக் குறிப்பிடுகின்ருர் (தொ. சொ 167) இவற்றுள் 'யா' என்னும் சொல்லே 'என்' என்று மாறி இருக்கலாம். 'வவ்விறு சுட்டிற்கு அற்றுதல் வழியே' (நன் 250) 'சுட்டு வகரம்' ... ... (நன். 235) என்றெல்லாம் 'வவ்விறு சுட்டி ணைக் குறிப்பிட்ட நன்னூலார் 'வவ்விறு வினு' என்று ஒன்று குறிப்பிடவில்லை. இதனின்று நன்னூலார் காலத்திலும் 'என்' என்ற வினுச்சொல் தோன்றவில்லை எனத் தெரிகிறது.

இக்காலத் தமிழில் எவற்றை, எவற்ருன், போன்ற சொற்களில் எகரம் வினுவாக அமைந்துள்ளது. ஆனுல் வற்று (தொ. எ. 119) அன்றேல் அற்றுச் சாரியை (நன்; 250) அஃறிணைப் பன்மைப் பெயர்களுடன் மட்டுமே. அவை உருபேற்கும் போது இணையும். இதனுல் எகர வினுவோடு வற்று (அற்று) இணைய முடியாது என்பதும் எவற்றை, எவற்ருன் போன்றவை 'எம்' என்ற அஃறிணைப் பன்மைச் சொல்லோடு வேற்றுமை உருபு இணைய அமைந்தவைகளே என்பதும் உறுதி. எகரம் பெயர் அன்று என்பதும் இவண் அறிதற்பாற்று.

எனவே அ இ உ என்னும் சுட்டினடியாகத் தோன்றிய அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்களின் ஒப்புமையாக்கத்தால். யாவென் அடிதிரிந்து அமைந்த எகர வினுவின் அடிபபடையில் 'என்' என்றும் அஃறிணைப் பன்மை வினுப்பெயர் தோன்றி இருக்கலாம் அதனேடு உருபுகள் இணையும் போதுதான் எவற்றை எவற்ருன், எவற்ருெடு போன்ற சொற்கள் அமைதல் இயலும் தமிழ்ப் பேரகாரதியும் 'எவ்' என்ற சொல் எவை என்ற பொருளினது என்கின்றது

எ — டு எவ்வந்தன ? — எவை வந்தன ?
எஃகடிய ? — எவை கடிய ?

அடிக்குறிப்புக்கள்

1 இவண் யாகார வினுவடியிற்ருேன்றிய 'யாங்கு' என்னும் சொல் குறிக்கப்படுகின்றன. யகரமெய் முதல் வினுவடியைச் சுட்டிக் கூறும் நூற்பாக்கள் இவைகளே

2. 'யாவென் வினுவும் ஆயியல் திரியாது' (தொ. எ 175) 'யாவென் வினுவின் ஐயென் இறுதி' (தொ. எ 1(5) என யா. யாவை ஆகிய சொற்கள் வினைப்பெயர்கள் எனக் குறிக்கப் படுதல் நோக்கற்பாற்று.

3. யாவென் வினுவடி பெயரடையாக இடம் பெருமை இவண் அறியத்தக்கது.

4. ஏனை உயிர்களோடு இணைந்து யகரம் மொழி முதலில் வருகின்ற சொற்கள் எல்லாம் கடன் சொற்களே.

சிவத்திரு ஞானியார் அடிகள் நூற்றாண்டு விழா

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தின் ஐந்தாம் பட்டத்தலைவர் சிவத்திரு சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரியார் சுவாமிகளின் நூற்றாண்டு விழா 19, 20, 21 22—5—73 ஆகிய நான்கு நாட்களில் திருப்பாதிரிப்புலியூரில் சிறப்புற நடைபெற்றது

ஞானியார் அடிகள் 17—5—1873 இல் தஞ்சை மாவட்டம் திருநாகேச்சரத்தில் வீரசைவ பரம்பரையைச் சேர்ந்த அண்ணாமலை ஐயருக்கும் பார்வதி அம்மையாருக்கும் தவப்புதல்வராகத் தோன்றினார்கள். அடிகளாருக்குப் பழநியாண்டி என்ற பெயரிட்டு அழைத்தனர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தின் நான்காம் பட்டத்தலைவரின் விருப்பத்திற் கிணங்க நமது அடிகளாரை மிகச் சிறு வயதிலேயே மடத்தில் கல்வி பயல ஒப் படைத்தார்கள். மடத்தில் ஒழுக்கத்துடன் வளர்ந்து நல்ல கல்விப்பயிற்சி பெற்றார்கள். 1889 இல் தன் பதினேழாம் அகவையில் ஐந்தாம் பட்டத்தலைவராக மடத்தின் பொறுப்பை ஏற்றார்கள். ஏறத்தாழ ஐம்பத்து மூன்று ஆண்டுகள் மடத்தின் தலைவராகவிருந்து 1—2—1942 இல் இறைவன் திருவடி நீழலையடைந்தார்கள்.

ஞானியார் அடிகளார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார்கள். 1919 இல் நடந்த கரந்தைத் தமிழ்ச் சங்க ஏழாவது - எட்டாவது ஆண்டு விழாவிற்கு ஞானியார் அடிகளார் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். அப்போது தஞ்சையிலுள்ள சங்கச்சார்பான கழகங்களும் பெரியார்களும் ஞானியார் அடிகளாரை அழைத்து பல திறத்த பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றச் செய்தனர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திரிசிரபுரம் கிளைக்கும் சென்று செந்தமிழ்ச் சிறப்பினை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்

பின்னர் 1938 இல் நடந்த கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்கு ஞானியார் அடிகளார் தலைமை வகித்து மூன்று நாள் விழாவையும் மிகச் சிறப்புடன் நடத்தித் தந்தார்கள். அவ்விழாவின் போது ஞானியார் அடிகளார் கரந்தைப் புலவர் கல்லூரியைத் தொடங்கி வைத்து ஆசி கூறினார்கள். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் முதல் ஆசிரியராக அமர்ந்து பாடம் சொல்லிப் புலவர் கல்லூரி தமிழ் பரப்பும் பணியைத் தொடங்கியது.

வெள்ளி விழாவில தம் தலைமைப் பேருரையில் ஞானியார் அடிகளார் தமிழின் தனிமை, தொன்மை, செம்மை மற்றுமுள்ள பண்புகளையும் விளக்கினர்கள். ஞானியார் அடிகளார் கூறிய சொற்கள் சிலவற்றை அவர்கள் கூறியவாறே காண்போம்.

''உலகில் எத்தனையோ மொழிகள் இருப்பினும் அவையெல்லாம் மொழியென்ற மட்டில் போற்றப் பெறுகின்றனவே யொழிய அம்மொழிகளில் எவற்றையேனும் தெய்வமாக வழிபட்டதாக அடியேனுக்கு எட்டவில்லை. தமிழை மட்டுமே நம் முன்னேர் தெய்வமெனப் போற்றி வந்திருக்கிறர்கள். நாவுக்கரசர் உண்மையாகவே கடவுள் தமிழாக ஆயினன் என்று போற்றிக் கூறியுள்ளார் கடவுள் ஒன்ருேடும் சேராத காலம் சிறப்புநிலை. மற்ரென்ருேடு சேர்ந்த காலம் பொதுநிலை. கடவுளின் தனித்த பேரின்ப வடிவமே சிறப்புநிலை பொதுநிலையில் திருமறைக் காட்டில் எழுந்தருளியுள்ள பெருமானை நாவரசர் ''முத்தமிழும் ஆனுன் கண்டாய்'' என்று போற்றியிருக்கின்ருர். இறைவன் இது வரையில் சிறப்பு நிலையிலிருந்து இது போது பொதுநிலையில் முத்தமிழ் மட்டுமே ஆகிவிட்டான என்று குறிப்பிட்டருளினுர்.''

தமிழ்த் தெய்வ வணக்கம் கடவுள் வணக்கமாகாது என்று அண்மையில் எழுப்பப் பெற்ற கூற்றுக்கு மாற்றமாக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே ஞானியார் அடிகளார் தந்துள்ள விளக்கம் எவ்வளவு நயமுடைத்து என்று அறியக்கிடக்கின்றது.

ஞானியார் அடிகளாருக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை யிடமிருந்த அன்பைக் காட்டும் சில சொற்கள் பின்வருமாறு.

''அடியேன் நாளும் முருகவேளை வழிபட்ட பின் நம் நாட்டு நல்லோர் பலரை என் நெஞ்சத்தே உள்ளுவது வழக்கம். அப்பலருள் முதல்வராக உள்ளப்பெறும் சிறப்புடையவர் இச்சங்கத் தலைவரே''

19—5—73 இல் நடந்த ஞானியார் அடிகளாரின் நூற்ருண்டு விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிகளுக்குதத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்கள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் அவர்கள் தொடக்கவுரை யாற்றினுர். திரு. T M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் ஞானியார் அடிகளாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள், பின்னர்க் கந்தபுராணத்தில் சிறந்தது வாழ்க்கை விளக்கமா அல்லதுதத்துவவிளக்கமா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இரண்டாம் நாள் 20—5—73 காலை

யில் குருமூர்த்திகள் வழிபாடும், டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் சுந்தரசண்முகனார் எழுதிய "தமிழ் நூல் தொகுப்புக்கலை" என்ற நூலின் அரங்கேற்றமும் நடைபெற்றது. அன்று மாலையில் ஞானியார் அடிகளாரைப் போற்றுதல் தொடர்பான நிகழ்ச்சிகள் உயர் நீதி மன்ற நடுவர் S. மகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஞானியார் அடிகளாரின் வரலாற்று நூலை மயிலம் மடத்தலைவர் அவர்கள் வெளியிட்டார்கள் மற்ற மடங்களின் தலைவர்களும் வந்திருந்து போற்றுரைகள் வழங்கினர்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாகச் சங்கத் தலைவர் ஞானியார் அடிகளாரைப் பாராட்டிப் பேசினர். அடிகளாருக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடனிருந்த நெருங்கிய தொடர்பையும் சங்கத்தலைவர் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களிட மிருந்த அன்பையும் எடுத்துக் கூறினர்கள். அடிகளாருக்கு அஞ்சலியையும் பாராட்டையும் தெரிவித்து ஞானியார் மடம் தொடர்ந்து அடிகளாரின் தொண்டுகளைச் சிறப்புறச் செய்து வர முருகவேள் அருள வேண்டுமென்று கூறி வாழ்த்தினர்கள். திருமதி இராசேச்வரி அம்மையார் தானும் தன் தந்தையாரும் அடிகளாரிடம் நெருங்கிப்பழகி வந்தமையையும் அடிகளாரின் குணங்களையும் சொற்பொழிவாற்றும் திறமையையும் எடுத்துக் கூறினர்கள் சித்தாந்தம் ஆசிரியரான திரு க கலியாணம் பிள்ளை அவர்கள் தாம் சைவசித்தாந்த சமாசத்தின் துணைச் செயலாளர் முதலிய பொறுப்புக்களிலிருந்த போதும் பிற சமயங்களிலும் ஞானியார் அடிகளாரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்களையும் தான் கண்ட அடிகளாரின் சொற்பொழிவாற்றும் முறை, பொருள்களை கேட்போர் எளிதாக உணரும்படிச் செய்தல் போன்ற சிறப்புக்களை யெல்லாம் விளக்கினர்கள். திரு. தி கி நாராயணசாமி நாயுடு அவர்கள் அடிகளாரின் சீர்திருத்தப் போக்கினைப் போற்றியும் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே அடிகளார் சமதர்மக் கொள்கைகளைப் பின்பற்றினர்களென்பதையும் பொதுவாக மக்களுக்குத் தெரியவாதிருந்த அடிகளாரின் கொள்கைகளையும் கருத்துக்களையும் விளக்கிக் கூறினர்கள்

மூன்றும் நாள் விழாவில் சட்டமன்ற உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமையில் தமிழ் வளர்த்த துறவிகள் என்ற பொருள் பற்றிக் கருத்தரங்கம் நடைபெற்றது. நான்காம் நாள் மாவட்ட நீதிபதி T. N சிங்காரவேலர் அவர்களின் தலைமையில் திருமுருக கிருபானந்தவாரியார் 'குருபக்தி' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். சிவத்திரு ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் பாராட்டுடன் ஞானியார் அடிகளாரின் நூற்றாண்டு விழா இனிதே நிறைவேறியது.